**வீட்டுலேயே இருந்து பெறுவதற்கான கோவிட்-19 தடுப்பூசி மற்றும் பூஸ்டர்கள் முன்கூடிய அணுகல் மற்றும் சுகாதார சமபங்குக்கு உதவுகின்றன**

வாஷிங்டன் மாநிலத்தில் வசிப்பவர்களில் சுமார் 30 சதவீதம் பேர் கோவிட்-19 க்கு எதிராக முழுமையாக தடுப்பூசி போட்டதாகக் கருதப்படவில்லை. தடுப்பூசி வைரஸிலிருந்து பாதுகாக்கிறது என்று தரவு காட்டுகிறது. தடுப்பூசி உங்களுக்கு வைரஸ் வந்தால் கடுமையான நோய் மற்றும் இறப்புக்கான வாய்ப்பைக் குறைக்கிறது மேலும் வைரஸ் தொடர்பாக மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதையும் குறைக்க உதவுகிறது. கோவிட்-19 இன் புதிய திரிபுகளுக்கு எதிராக உங்கள் நோயெதிர்ப்பு சக்தியை பராமரிக்க உதவும் முதன்மை தடுப்பூசி தொடர் மற்றும் ஒரு பூஸ்டர் டோஸ்சைப் பெறுவது முக்கியம். பூஸ்டர்களுக்கான தற்போதைய பரிந்துரை கீழே உள்ள விளக்கப்படத்தில் காட்டப்பட்டுள்ளது:

| முதன்மைத் தொடருக்கான முடிக்கப்பட்ட தடுப்பூசி | தடுப்பூசி பூஸ்டர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட வயது | கடைசி முதன்மை டோஸ் (பொருந்தும் பட்சத்தில் கூடுதல் டோஸ் உட்பட) மற்றும் பூஸ்டர் டோஸ்க்கு இடையிலான இடைவெளி | டோஸ்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| Pfizer-BioNTech | ≥ 12 வயது | ≥ 5 மாதங்கள் | 1 |
| Moderna | ≥ 18 வயது | ≥ 5 மாதங்கள் | 1 |
| Janssen | ≥ 18 வயது | ≥ 2 மாதங்கள் | 1 |

உங்களையும் தடுப்பூசி போட முடியாதவர்களையும் பாதுகாக்க உதவுங்கள். வீட்டிலேயே இருக்கும் பலர் தங்கள் அன்றாடத் தேவைகளுக்கு உதவ மற்றவர்களை நம்பியிருக்கிறார்கள், இதனால் மற்றவர்களும் தொடர்ந்து அவர்களது வீடுகளுக்குச் செல்கிறார்கள். தடுப்பூசி போடப்படாத அல்லது அறியாமல் சமூக பரவலை அனுபவிக்கும் மற்றவர்களால் அவர்கள் வைரஸால் பாதிக்கப்படக்கூடியவர்களாக இருக்கிறார்கள்.

**நீங்கள் அல்லது உங்களுக்குத் தெரிந்த ஒருவர் வீட்டிலேயே இருப்பவராக இருந்து அவருக்கு கோவிட்-19 தடுப்பூசி அல்லது பூஸ்டர் தேவைப்பட்டால், கீழே உள்ள விருப்பங்களில் ஒன்றை இன்றே கோரவும்:**

• வீட்டிற்கு வந்து தடுப்பூசி சேவைகளை வழங்கும் உங்கள் உள்ளூர் சுகாதார அதிகார வரம்பிற்கு அழைக்கவும்.

• மாநில கோவிட்-19 உதவிக்கான ஹாட்லைனை அழையுங்கள், உங்களுக்கு வீட்டிற்கு வந்து தடுப்பூசி வழங்கும் சேவைகள் தேவை என்பதை அவர்களுக்குத் தெரிவிக்கவும். 1-800-525-0127 அல்லது 1-888-856-5816 ஐ டயல் செய்து, பின்னர் #.அழுத்தவும் **மொழி விளக்கம் கிடைக்கும்!**

• வீட்டிற்கு சென்று தடுப்பூசி சேவைகளை வழங்க அல்லது ஏற்பாடு செய்யக்கூடிய மாவட்ட மற்றும்/அல்லது மாநில மொபைல் தடுப்பூசி குழுக்களுடன் உங்களை இணைக்க கீழே இணைக்கப்பட்டுள்ள ஆன்லைன் பதிவு படிவத்தை பூர்த்தி செய்யவும்.

Department of Health (DOH சுகாதாரத் துறை) வீட்டிலேயே இருந்து தடுப்பூசி பெறுவதற்கான கோரிக்கை கணக்கெடுப்பு இணைப்பு: https://redcap.link/WA_HomeBasedVax (ஆங்கிலம்)

இந்தச் சேவையைப் பற்றி உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், மின்னஞ்சல் செய்யவும்:covid.vaccine@doh.wa.gov.

**நிரல் வரலாறு**

Department of Health (DOH சுகாதாரத் துறை) 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வீட்டிற்கு சென்று தடுப்பூசிகளை வழங்கத் தொடங்கியது. DOH வீட்டிலேயே இருந்து பெறுபவர்களுக்கானதடுப்பூசி கோரிக்கை கணக்கெடுப்பு(ஆங்கிலம்) வாஷிங்டன் மாநிலத்தில் உள்ள அனைத்து 39 மாவட்டங்களையும் உள்ளடக்கியது. ஒரு பகுதிக்கான தடுப்பூசி போடுபவர்கள் தடுப்பூசிகள் தேவைப்படுபவர்களுக்கு முதன்மை நோய்த்தடுப்பு மருந்துகள் மற்றும் பூஸ்டர் மருந்துகளை கொண்டு சேர்ப்பதற்கான செயலாக்கத்தையும் மற்றும் சேவைகளையும் தொடர்ந்து வழங்குகின்றனர். வீட்டிற்கு சென்று வழங்கும் தடுப்பூசி சேவைகளை கூடுதல் மொழிகளில் கோர கோவிட்-19 உதவி ஹாட்லைன் (1-800-525-0127 அல்லது 1-888-856-5816) ஐ அழைத்து # அழுத்தவும்.

**தடுப்பூசி சமபங்கை மேம்படுத்துதல்**

மாநிலத்தின் தடுப்பூசிகள் கிடைக்காமல் போகக்கூடிய பகுதிகளில், வீட்டிற்கு சென்று தடுப்பூசி வழங்கும் சேவைகள் கோவிட்-19 தடுப்பூசிகளை வழங்குகிறது. இந்தச் சேவையின் நோக்கம், சுகாதார சமபங்கு மற்றும் கோவிட்-19 தடுப்பூசி அணுகலை மேம்படுத்துவதாகும்:

- வீட்டை விட்டு வெளியேறவோ, வரிசையில் நிற்கவோ, எந்த தூரமாக இருந்தாலும் நடக்கவோ முடியாதவர்களுக்கு.
- உடல் அல்லது அறிவுசார் குறைபாடுகளை அனுபவிப்பவர்களுக்கு
- அணுகலை பெறமுடியாமல் கட்டுப்படுத்தும் மனநல நிலைமைகள் உள்ளவர்களுக்கு.

தடுப்பூசி பாலைவனங்கள் என அழைக்கப்படும் மாநிலத்தின் பகுதிகளில் சுகாதார சமபங்கை மேம்படுத்த, வீட்டிற்கு சென்று வழங்கப்படும் தடுப்பூசிகள் உதவுகின்றன. பின்வருவனவற்றில் ஒன்று உண்மையாக இருக்கும்போது தடுப்பூசி பாலைவனங்கள் ஏற்படுகின்றன:

- தடுப்பூசி போட்டுக்கொள்வதற்கான இடங்கள் இல்லாதபோது.
- தடுப்பூசி வழங்கும் சுகாதார வழங்குநர்கள் இல்லாதபோது.
- புவியியல் பகுதி மற்றும் தற்போதுள்ள மக்கள்தொகைக்கு சேவை செய்ய சில வழங்குநர்கள் மட்டுமே இருக்கும்போது

பொதுமக்களுக்கான தடுப்பூசி சேவைகள் கிடைக்காமல் போகலாம் அல்லது இந்த இடங்களை அணுகுவது கடினமாக இருக்கலாம். வீட்டிற்கு சென்று தடுப்பூசி வழங்கும் சேவையானது மாநிலத்தின் புவியியல் மற்றும் தொலைதூரப் பகுதிகளை அடைவதற்கு மிகவும் கடினமான பகுதிகளில் வாழும் போது அடிக்கடி ஏற்படும் அணுகல் சிக்கல்களை நீக்குகிறது.

மொபைல் தடுப்பூசி சேவைகள் மக்கள் தங்கள் வீடுகளில் நேரடியாக உயிர்காக்கும் தடுப்பூசிக்கான அணுகலை வழங்க உதவுகின்றன. இந்தச் சேவையானது அதிக சமூக பாதிப்புக் குறியீட்டைக் கொண்ட பகுதிகளில் நேரடியாக கவனம் செலுத்துகிறது, இது சாத்தியமான சுகாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறிக்கிறது. மக்கள் வாஷிங்டன் மாநிலத்தில் எங்கு வாழ்ந்தாலும் கணக்கெடுப்பு மூலம் தடுப்பூசியைக் கோரலாம்.

**கோவிட்-19 தடுப்பூசிக்கு அப்பால் வீட்டில் இருந்தபடியே கிடைக்கக்கூடிய பிற சேவைகள் உள்ளனவா?**

தற்சமயம், மொபைல் செவிலியர் குழுக்கள் கோவிட்-19 நோய்த்தடுப்பு மருந்துகளுக்கு மட்டுமே தடுப்பூசியை வழங்க முடியும். காய்ச்சலுக்கான தடுப்பூசி மற்றும் ஆய்வகத்தில் இரத்தம் எடுப்பது போன்ற பிற சாத்தியமான சேவைகள் இந்த நேரத்தில் கிடைக்கவில்லை.

கோவிட்-19 இனால் மரணம் ஏற்படுவது மற்றும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டிய மிகப்பெரிய ஆபத்தில் இருக்கும் மக்கள் தொகைக்கு சுகாதார சமபங்குகளை மேம்படுத்த மொபைல் குழு சேவை உள்ளது. இன்றே கோவிட்-19 தடுப்பூசியை பெற வேண்டியவர்களுக்கான கணக்கெடுப்பை முடிக்க முயற்சிக்கவும்.

**கோரிக்கையைச் சமர்ப்பித்த பிறகு நான் என்ன எதிர்பார்க்க முடியும்?**

DOH வாராந்திர கோரிக்கைப் படிவங்களைச் சேகரித்து, அவற்றை உரிய இடத்திற்கு கொண்டு சேர்க்கவும் மற்றும் நடவடிக்கை எடுப்பதற்காகவும் குடியிருப்பாளரின் உள்ளூர் சுகாதார அதிகார வரம்பிற்கு அனுப்புகிறது. உள்ளூர் சுகாதார அலுவலக ஊழியர்கள் மொபைல் நோய்த்தடுப்பு குழுவை அணுகுவார்கள். உள்ளூர் சுகாதாரப் பணியாளர்களால் வீட்டிலேயே இருப்பவர்களுக்கு தடுப்பூசிகளை ஒருங்கிணைத்து வழங்க முடியாவிட்டால், அவர்கள் இதற்கு உதவுவதற்காக DOH உடன் ஒருங்கிணைவார்கள்.

எந்தவொரு மொழிபெயர்ப்புத் தேவைகளையும் ஆதரிக்க உள்ளூர் மொழியில் உதவி கிடைக்கிறது. ஒரு உள்ளூர் பொது சுகாதார அலுவலகம் உதவ முடியவில்லை என்றால், அந்த அலுவலகம் DOH இன் உதவியைக் கோரலாம். மொபைல் நோய்த்தடுப்புக் குழுவானது, வீட்டிலேயே இருப்பவர்களுக்கு இலவச கோவிட்-19 தடுப்பூசி சேவையைத் திட்டமிட, கோரிக்கையாளருடன் தொடர்பு கொள்ளும்.

**DOH 821-169 March 2022 Tamil**

இந்த ஆவணத்தை வேறொரு வடிவத்தில் கோர, 1-800-525-0127 ஐ அழைக்கவும். காது கேளாதோர் அல்லது கேள் திறன் குறைபாடு உள்ள வாடிக்கையாளர்கள், தயவுசெய்து 711 (Washington Relay) ஐ அழைக்கவும் அல்லது civil.rights@doh.wa.gov க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.